குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஒசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 14/2019

அ.சா. 1

| | | |
|---|---|---|
| பெயர் | : | திருமதி. நிர்மலா |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு. ராமைய்யா |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | |
| மதம் | : | |
| வயது | : | 58 |

**1873-**ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது**. 25.04.2023**

**(**எதிரி ஆஜர்**)**

முதல் விசாரணை **:**

நான் அத்திமுகத்தில் குடியிருந்து, விவசாயம் செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். நான் என்னுடைய விவசாய நிலத்தில் கொத்தமல்லி விவசாயம் செய்து வந்தேன். ஆஜர் எதிரியின் நிலம் எனது விவசாய நிலத்திற்கு பக்கத்தில் உள்ளது. அதில் அவர் புதினா விவசாயம் செய்திருக்கிறார். ஆஜர் எதிரி விவசாய நிலத்தில் இருந்த புதினாவில் பூச்சிகள் இருந்தது. கடந்த 01.05.2018ம் தேதி பகல் 11.00 மணியளவில் ஆஜர் எதிரி அவருடைய நிலத்தில் இருந்த புதினாவை அறுத்து என்னுடைய நிலத்தில் போட்டுக்கொண்டிருந்தார். நான் ஆஜர் எதிரியை அது சம்மந்தமாக கேட்ட போது, என்னை கீழே தள்ளி எனது வலது கையின் விரலை பிடித்து முறுக்கியதால் எனது வலது கை மோதிர விரலில் எலும்பு முறிவும் மற்றும் சுண்டு விரலில் உள்காயம் ஏற்பட்டது. என்னை ஆஜர் எதிரி தேவடியா, கன்டாரஓலி என்று கெட்ட வார்த்தையால் திட்டினார். நான் என்னுடைய நிலத்தில் கையில் வலி அதிகமாக இருந்ததால், அலுதுக்கொண்டு உட்கார்ந்திருந்தேன். என்னுடைய தோட்டத்திற்கு அருகே தோட்டத்திலிருந்த சிவசங்கர் (எ) சங்கரப்பா என்னை வந்து விசாரித்தார். நான் நடந்ததை சொன்னேன். பிறகு என்னை எனது தம்பி வெங்கடேஷ் அழைத்து சென்று ஓசூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தேன்.

பின்னர் மேல் சிகிச்சைக்காக பெங்களூர் நர்மதா மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தேன். அங்கு நான் உள்நோயாளியாக நான்கு நாட்கள் சிகிச்சையில் அனுமதிக்கப்பட்டேன். மேற்படி சம்பவம் குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். மேற்படி புகார் மனுவில் உள்ள விவரங்களை நான் தெலுங்கு மொழியில் தெரிவித்தேன். அவ்விவரங்களை காவல் நிலையத்திற்கு முன்பு இருந்த பெயர் தெரியாத நபர் தமிழில் எழுதி எனக்கு அவ்விவரங்களை படித்து காட்டிய பின் உறுதி செய்து அதில் கையெழுத்திட்டேன். **(**<u>மேற்படி புகார் மனுவானது அ**.**சா**.**ஆ**.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது**).**</u> போலீசார் இந்த வழக்கு குறித்து என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை **:**

1) எனக்க தமிழ் மொழியில் எழுத படிக்க தெரியாது என்ற விவரத்தை நான் காவல் துறையினரிடம் தெரிவித்தேன். நான் காவல் நிலையத்திற்கு 01.05.2018ம் தேதியன்று காலை 11.00 மணிக்கு பேரிகை காவல் நிலையம் சென்று அ.சா.ஆ.1 புகார் மனு அளித்தேன். என்னை சிகிச்சைக்கு வேண்டி மருத்துவமனைக்கு செல்ல வேண்டி காவல் நிலையத்தில் சீட்டு ஏதேனும் அளித்தார்களா என்றால் அளிக்கவில்லை. ஆனால் எனக்கு CSR பதிவு செய்து நகல் அளித்தனர். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தில் தெரிவித்துள்ள விவரங்களை தான் காவல் துறையினரிடம் வாக்குமூலமாக அளித்தேன். நான் பெங்களூரில் சிகிச்சை பெற்றுக்கொண்டு அதன் பின்னிட்டு 06.05.2018ம் தேதியன்று நேரடியாக பேரிகை காவல் நிலையம் சென்றுவிட்டு, அதன் பின்னிட்டு தான் என்னுடைய ஊருக்கு வந்தேன்.

2) நான் பெங்களூரில் உள்ள நர்மதா தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தது குறித்த அனைத்து மருத்துவ சான்றுகளும் காவல் நிலையத்தில் ஒப்படைத்தேன். என்னுடைய தம்பி திரு. வெங்கடேஷ் தான் என்னை அரசு மருத்துவமனைக்கும், பெங்களூரில் உள்ள தனியார் மருத்துவமனைக்கும் அழைத்து சென்றார். சம்பவ சமயத்தில் எனக்கு உரிமைப்பட்ட நிலத்தில் நான் கொத்தமல்லி விதைத்து விவசாயம் செய்துவந்தேன் என்றாலும், ஆஜர் எதிரி அவருடைய நிலத்தில் புதினா விதைத்து விவசாயம் செய்துவந்தார் என்றாலும் சரிதான். கடந்த 06.05.2018ம் தேதியன்று காலை 11.30 மணிக்கு பேரிகை காவல் நிலையம் நான் சென்றிருந்தேன், அப்பொழுதும் காவல் துறையினர் என்னை இவ்வழக்கு சம்பவம் குறித்து விசாரணை செய்தனர். அப்போது என்னுடன் என்னுடைய சகோதரர் வெங்கடேஷ் மற்றும் சாட்சி சங்கரப்பா உடனிருந்தனர்.

அ.சா.ஆ.1 புகார் மனுவிலும், காவல் துறையினரிடம் நான் அளித்த வாக்குமூலத்திலும் ஆஜர் எதிரி வழக்கு சம்பவத்தின் போது என்னை கீழே தள்ளிவிட்டதாக விவரம் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னை எதிரி கீழே தள்ளிவிட்டு அதன் காரணமாக என்னுடைய வலது கையில் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல, எதிரி அவருடைய கையால் என்னுடைய வலது கையை முறுக்கிய காரணத்தினால் காயம் ஏற்பட்டது. அ.சா.ஆ.1 புகார் மனுவிலும், என்னுடைய வாக்குமூலத்திலும் எதிரி அவருடைய எந்த கையை பயன்படுத்தி என்னுடைய வலது கையை முறுக்கி காயம் ஏற்படுத்தினார் என்ற விவரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் சிகிச்சை பெற்ற நர்மதா மருத்துவமனையில் உள்ள மருத்துவர்களை எனக்கு நன்கு தெரியும் என்றால் சரியல்ல. நான் சிகிச்சை பெற்று வந்ததை காண்பிப்பதற்குரிய மருத்துவ சான்றுகளை பேரிகை காவல் நிலையத்தில் 06.05.2018 தேதியன்று காண்பித்தேன், ஆனால் காவல்துறையினர் அதனை பெற்றுக்கொள்ளவில்லை, அதுகுறித்து கையெழுத்திட்டு எனக்கு சான்று எதுவும் வழங்கவில்லை.

3) 06.05.2018 தேதியன்று என்னை காவல்துறையினர் விசாரித்தனர், அதன் பின்பு நான்கு நாட்கள் கழித்து மீண்டும் என்னை விசாரித்தனர். 06.05.2018 தேதியன்று இவ்வழக்கு சம்பவம் குறித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தனர். நான் மருத்துவமனையில் சிகிச்சைக்கு வேண்டி அனுமதிக்கப்பட்ட போது, எங்கு வைத்து, எவ்வாறு, எந்த நேரத்தில் எனக்கு காயம் ஏற்பட்டது என்ற விவரத்தினை மருத்துவரிடம் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பிறகு அன்றைய தினம் நான் என்னுடைய வீட்டிற்கு மதியம் 12.30 மணியளவில் வந்தடைந்தேன். அதன் பிறகு என்னுடைய சகோதரருடன் காவல் துறையினர் வழக்கு சம்பவ இடமான என்னுடைய நிலத்தை வந்து பார்வையிட்டனர். வழக்கு சம்பவத்திற்கு முன்பு எனக்கும், ஆஜர் எதிரிக்கும் எந்த தகராறும், முன் விரோதமும் இருந்தது கிடையாது. நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எங்கள் தோட்டத்தில் நான் கொத்தமல்லி பயிரிடவில்லை என்றாலும், ஆஜர் எதிரி அவருடைய தோட்டத்தில் புதினா பயிரிடவில்லை என்றாலும், வரப்பு தகராறு காரணமாக நான் வேறு எங்கோ விழுந்துவிட்டு, அந்த காயத்தை பயன்படுத்தி காலம்தாழ்த்தி புகார் அளித்தேன் என்றாலும், நான் கொடுத்த புகாருக்கும், சாட்சியத்திற்கும் சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல. புகாரில் கொடுத்த விவரங்களை தவிர மற்ற விவரங்களை மிகைப்படுத்தி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

V AGAVITHAN
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.1
Digitally signed by V AGAVITHAN
Location: HOSUR

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 14/2019

அ.சா. 2

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. வெங்கடேஷ் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு. ராமைய்யா |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | |
| மதம் | : | |
| வயது | : | 55 |

**1873-**ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது**. 25.04.2023**

**(**எதிரி ஆஜர்**)**

முதல் விசாரணை **:**

நான் அத்திமுகத்தில் குடியிருக்கிறேன். விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது அக்கா ஆவார். ஆஜர் எதிரியை தெரியும். 01.05.2018 தேதி பகல் 11.00 மணியளவில் எனது அக்கா நிர்மலாவை வேணு என்பவர் அடித்துவிட்டதாக பிரகாஷ் என்பவர் கைபேசியில் தொடர்பு கொண்டு தகவல் தெரிவித்தார். மேற்படி பிரகாஷ்க்கு என்னுடைய தோட்டத்தை குத்தகைக்கு கொடுத்துள்ளேன். நான் என்னுடைய அக்கா வீட்டிற்கு சென்று அக்காவை பார்த்தேன். அக்காவிற்கு வலது கை மோதிர விரல் மற்றும் சுண்டுவிரலில் வீக்கமாக இருந்தது. அதன் பிறகு மேற்படி சம்பவம் குறித்து புகார் அளிக்க பேரிகை காவல் நிலையத்திற்கு நானும், எனது அக்கா அ.சா.1 மற்றும் சிவசங்கர் (எ) சங்கரப்பா ஆகியோர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். அதன் பின்னிட்டு ஓசூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சையில் சேர்த்த போது, எலும்பு முறிவு மருத்துவர் அப்போது இல்லாததால் மேல் சிகிச்சைக்காக பெங்களுர் நர்மதா மருத்துவமனையில் சிகிச்சைக்காக எனது அக்கா அ.சா.1 ஐ சேர்த்தேன். அங்கு மருத்துவர் பரிசோதித்து வலது கை மோதிர விரல் மற்றும் சுண்டுவிரலில் எலும்பு முறிவு ஏற்பட்டிருப்பதாக மருத்துவர் கூறினார்.

ஐந்து நாட்கள் அங்கு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் அ.சா.1 இருந்தார். இந்த வழக்கு குறித்து போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

அ.சா.ஆ.1 புகார் மனுவை காவல் நிலையத்தில் அளித்த சமயத்தில் நான் அ.சா.1 உடன் காவல் நிலையம் சென்றிருந்தேன். அ.சா.ஆ.1 புகார் மனுவில் உள்ள விவரங்களை என்னுடைய சகோதரி அ.சா.1 தெரிவித்தார். அதனை பேரிகை காவல் நிலையத்திற்கு அருகில் இருந்த பெயர் தெரியாத நபர் அ.சா.ஆ.1 புகார் மனுவை எழுதிக்கொடுத்தார். நாங்கள் பேரிகை காவல் நிலையத்தில் ஏரத்தாள 1/2 மணி நேரம் இருந்தோம். அ.சா.ஆ.1 புகார் மனு அளித்ததில் காவல் துறையினர் CSR பதிவு செய்து நகல் அளித்தனர். பதிவு செய்யப்பட்ட CSR -ன் அடிப்படையில் காவல் துறையினர் அ.சா.1 ஐ யோ அல்லது என்னையோ அன்றைய தினம் விசாரிக்கவில்லை. அ.சா.1 இடம் அவருக்கு எவ்வாறு அவருடைய வலது கையில் மோதிர விரல் மற்றும் சுண்டு விரலில் காயம் ஏற்பட்டது என்று நான் விசாரித்து தெரிந்துக்கொண்டு காவல் நிலையத்தில் தெரிவிக்கவில்லை. அ.சா.1ம் எதிரியும் சம்பவத்தின் போது ஒருவருக்கொருவர் தெலுங்கு மொழியில் திட்டிக்கொண்டனர். என்னை காவல் துறையினர் தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துக்கொள்ளவில்லை. 01.05.2018 தேதியன்று பெங்களுர் நர்மதா மருத்துவமனையில் அ.சா.1 அனுமதிக்கப்பட்ட பிறகு சிகிச்சை முடிந்து 7 - 8 நாட்கள் கழித்து தான் எங்களுடைய ஊருக்கு அவரை அழைத்துவந்தேன். அ.சா.1 சிகிச்சை முடிந்து மருத்துவமனையிலிருந்து நான் அவரை அழைத்துவந்தேன், அவர் அவருடைய வீட்டிற்கு சென்றுவிட்டார். சிகிச்சை முடிந்து வந்த பிறகு காவல் துறையினர் சம்பவ இடமான அ.சா.1ன் நிலத்திற்கு வந்து விசாரித்தனர். என்னை தான் அன்றைய தினம் காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு அழைத்து சென்றனர். சம்பவ இடத்தினை பார்வையிட்டு காவல் துறையினர் வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்த போது நானும், என்னுடைய சகோதரி அ.சா.1ம் தான் காவல் துறையினருடன் இருந்தோம். நான் சாட்சியம் அளித்தது போல் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், அ.சா.1 என்னுடைய சகோதரி என்ற காரணத்தினால் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தில் உள்ள விவரங்களை உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

V AGAVITHAN

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.1
Digitally signed by V AGAVITHAN
Location: HOSUR

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 14/2019

அ.சா. 3

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. சிவசங்கர் (எ) சங்கரப்பா |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு. கிருஷ்ணமூர்த்தி |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | |
| மதம் | : | |
| வயது | : | 70 |

**1873-**ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது**. 25.04.2023**

**(**எதிரி ஆஜர்**)**

முதல் விசாரணை **:**

நான் அத்திமுகத்தில் குடியிருந்து, விவசாயம் செய்கிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோரை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். 01.05.2018 தேதியன்று காலை 11.00 மணியளவில் நான் தோட்டத்திற்கு சென்ற போது அ.சா.1 தனது கையை பிடித்துக்கொண்டு அலுதுக்கொண்டிருந்தார். நான் அ.சா.1 யிடம் எவ்வாறு காயம் ஏற்பட்டது என்று கேட்டேன் அதற்கு எதிரி தன்னை அடித்து தள்ளிவிட்டதாக தெரிவித்தார். பின்பு அ.சா.1 காயம்பட்ட வலது கை மோதிர விரலை பிடித்து பார்த்தேன், அது வளைந்திருந்தது. நான் தொட்டு பார்த்த போது வலி தாங்க முடியாமல் அ.சா.1 தொட வேண்டாம் என்று தெரிவித்தார். ஆகவே நான் அ.சா.1 ஐ அ.சா.2 திரு. வெங்கடேஷ் வீட்டிற்கு அழைத்து சென்றோம். அங்கிருந்து நானும் திரு. வெங்கடேஷ் என்பவரும் அ.சா.1 ஐ பேரிகை காவல் நிலையம் அழைத்து சென்றோம். அங்கு காவல் துறையினர் எழுத்து மூலமான புகார் வழங்குமாறு தெரிவித்தனர். ஆகவே அ.சா.1 அ.சா.ஆ.1 புகார் மனுவினை காவல் நிலையத்தில் தாக்கல் செய்தார். அதன் பின்னிட்டு சிகிச்சைக்கு வேண்டி ஓசூர் அரசு மருத்துவமனைக்கு அ.சா.1 ஐ அழைத்து சென்றோம்.

அப்போது அங்கே எலும்பு முறிவு மருத்துவர் இல்லாத காரணத்தினாலும், அ.சா.1 வலி தாங்க முடியாத காரணத்தினாலும் மேல் சிகிச்சைக்கு வேண்டி அ.சா.2 வெங்கடேஷ் அ.சா.1 ஐ பெங்களுர் நர்மதா மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். வழக்கு சம்பவம் தொடர்பாக காவல் துறையினர் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை **:**

என்னை தனியாக விசாரித்து காவல்துறையினர் வாக்குமூலம் பதிவு செய்துக்கொள்ளவில்லை. வழக்கு சம்பவம் 01.05.2018 தேதியன்று நடந்தது, கிழமை எனக்கு ஞாபகமில்லை. என்னை காவல் துறையினர் 01.05.2018 தேதியன்று தான் விசாரணை செய்தனர், அதன் பின்பு வழக்கு சம்மந்தமாக என்னை விசாரிக்கவில்லை. வழக்கு விவரங்களை தற்போது தான் நீதிமன்றத்தில் சாட்சியமாக அளிக்கிறேன். அ.சா.ஆ.1 புகார் மனுவில் அ.சா.1 அவருடைய வலது கையில் தான் கையொப்பமிட்டார் என்றால் சரிதான். அ.சா.1 ன் வலது கையில் மோதிர விரல் மற்றும் சுண்டு விரலில் எவ்வாறு காயம் ஏற்பட்டது என்று எனக்கு சரியாக தெரியாது. அ.சா.1 நெஞ்சு பகுதியில் காயங்க்ள் தென்பட்டது. மேலும் அவருடைய ஜாக்கெட் கிழிந்து காணப்பட்டது. அ.சா.1 ன் தோட்டத்தில் சம்பவத்தின் போது கொத்தமல்லி பயிரிடப்பட்டிருந்தது. அ.சா.1 ன் ஜாக்கெட்டில் எந்த பக்கம் கிழிந்திருந்தது என்று எனக்கு தெரியாது, அதன் நிறம் எனக்கு ஞாபகமில்லை. இவ்வழக்கு விவரங்கள் எனக்கு தெரியாது என்றாலும், அ.சா.1 எனக்கு தெரிந்தவர் என்ற காரணத்தினால் அவருக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.2 திரு. வெங்கடேஷ் என்பவரை தெரியும், அவருடைய தம்பி திரு. வேணுகோபால் என்பவரை எனக்கு தெரியும்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது**.**

V AGAVITHAN

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.1
Digitally signed by V AGAVITHAN
Location: HOSUR